சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
தை 16
ஸபர் 19
ஞாயிறு (29-1-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 67
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60

# மாசி நான்கு வந்தும் அந்த 'மர்மம்' துலங்கவில்லை!

## 'முடி' சூட்டுகிறார் ஜே. ஆர்; முடியிழந்தது தமிழினம்!

## தமிழர் பிரச்சினைகளுக்கு ஜே. ஆர். காணும் தீர்வு என்ன?

## இலவு காத்த கிளியா தமிழன்? இறுதியில் பட்டை நாமமா?

சிங்களப் பெரும் பான்மை இனத்தின் கரங்களுக்கு ஆட்சியதிகாரம் கிடைத்த பெப்ரவரி 4ம் திகதி 'சிறீலங்கா'வின் ஜனாதிபதியாக பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன முடிசூட்டிக் கொள்ள விருக்கிறார். ஆனல் தமிழ் ஈழத் தேசிய இனத்தின் உரிமைப் பிரச்சினைகளுக்கு தமது தீர்வு என்ன என்பதை பெப்ரவரி 4 நெருங்கியும் பிரதமர் ஜே.ஆர் வெளியிடவில்லை; அரசியலமைப்புத் தெரிவுக் குழுவிலும் தமிழ் தேசிய இனத்தின் உரிமைகள் சம்பந்தமான எந்த ஒரு தீர்வும் காணப்படவில்லை. இந்த நிலையில், தமிழினத்தின் பிரச்சினைகளுக்கு தனது முடிவான தீர்வு என்ன என்பதை ஐக்கிய தேசியக் கட்சி அரசு விரைவாக முன் வைக்குமா? அல்லது தீர்வு காணப் போவதாக வாயளவில் மட்டும் கூறிக் கொண்டே உலகத்தையும் தமிழ் மக்களையும் ஒருசேர ஏமாற்றி காலங்கடத்தி முடிவில் பட்டை நாமம் சூட்டப் போகிறதா என்கிற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்படுகிறது.

தமிழ் மக்களின் மொழியுரிமை, கல்விப்பிரச்சினைகள் தொழில் வாய்ப்புக்கள், சிங்களக் குடியேற்றப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு ஒரு சர்வகட்சிமாநாட்டைக் கூட்டி 'தேசிய' மட்டத்தில் இவற்றுக்கு ஓர் தீர்வுகண்டு, பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் போவதாக கூறிக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்குவந்தது.

பதவிக்கு வந்து ஆறு மாதமாகியும், சர்வகட்சி மாநாடு கூட்டப்படவில்லை — சர்வ கட்சி மாநாடு கூட்டும் திட்டம் 'நைஸாக' கைகழுவி விடப்பட்டு விட்டது.

இதன்பின் அரசியலமைப் புத்திருத்தம் மூலம், தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்றும், தெரிவுக்குழுவில் இதுபற்றிமுடிவு எடுக்கப்படுமென்றும் பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் அரசியலமைப்புத் திருத்தங்கள் அனைத்தும் கொண்டு வரப்பட்டு புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டு விடும் என்றும்கூறப்பட்டது.

ஆனல் இப்போது பெப்ரவரி 4 நெருங்கி விட்டது; ஆயினும், தமிழினப் பிரச்சினைகளுக்கு அரசியலமைப்புத் தெரிவுக்குழு தனது தீர்வை இன்னும் கண்டுபிடிக்கவுமில்லை; முன் வைக்கவும் இல்லை; மிக அண்மையில் எந்தத்தீர்வும் முன்வைக்கப் படவும் மாட்டாது என்பது இப்போது தெளிவாகி விட்டது.

பெப்ரவரி 4ம் நாள் பிரதமர் ஜே. ஆர், ஜனதிபதியாக தனக்குத்தானே முடி சூட்டிக்கொள்கிறார்; முடியிழந்ததமிழினம் மூலைக்குள் நின்று குமுறுகிறது. பெப்ரவரி 4க்கு பின்னரும் தமிழினப்பிரச்சினைகளுக்கு தனது தீர்வை அரசு பகிரங்கப் படுத்துமா? அல்லது இப்படியே காலங்கடத்தி, இலவு காத்த கிளிபோல தமிழ் மக்களை ஏமாற்றி முடிவில் பட்டைநாமம் சூட்டவிருக்கிறதா என்ற கேள்வியே இப்போது பதைபதைப்புடன் எழுந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையும் சமத்துவமும் வழங்கப் போவதாக தேசிய அரசுப் பேரவையில் முதலில் கூறிய பிரதமர் ஜே. ஆர், பின்னர் அதற்கு முரணக, சிங்களம் மட்டும் சட்டத்தை மாற்ற முடியாது என்றும், தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்று ஒன்று கிடையாதென்றும் கூறியிருந்தார். இந்நிலையில், உண்மையில் தமிழர் பிரச்சினைகளை எவ்வாறு அவர் தீர்க்கப்போகிறார்? அவர் முன் வைக்கும் தீர்வு தமிழ் மக்களை திருப்திப்படுத்துமா என்பதை உலகநாடுகள் கூர்ந்து நோக்கிவருகின்றன.

# "தமிழ் ஈழத்துக்கு குறைந்த எந்த சமாதானமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல"

## ஜே. ஆருக்கு லண்டன் தமிழ் இயக்கங்கள் கடிதம்!

"தமிழ் மொழியை அழித்தொழிக்கின்ற சிங்களம் மட்டும் சட்டம், 1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட குடியரசு அரசியலமைப்பின் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாகிவிட்டது. இந்தக் குடியரசு அரசியலமைப்புக்குள் நின்று நீங்கள் எதைச் செய்தபோதிலும், அதனல் தமிழ் தேசம் ஒன்று பிறப்பதை தடுத்துநிறுத்திவிட முடியாது. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றவன்முறைகளும் இனக்கொலைகளும சட்டரீதியாக 'தமிழ் ஈழம்' அமைவதற்கான ஒரு பங்களிப்பு என்று நாம் கருதுகிறோம். இந்த நிலையில் எந்த ஒரு சமாதானமும், உடன்படிக்கையும் செயற்கையாகவும், சட்டவிரோதமாகவுமே கருதப்படும்''

— இவ்வாறு சிறீலங்காவின் பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு லண்டன் ஈழவிடுதலை இயக்க செயலாளர் திரு. என். எஸ். கிருஷ்ணனும், தமிழர் நடவடிக்கைக் குழுத்தலைவர் திரு. எஸ். மகரசிங்கமும் கூட்டாக அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

அக்கடிதத்தில் அவர்கள் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இலங்கையில், அரசியல் அமைப்பு ரீதியாக இயங்கும் சிங்களவர் கட்சிகள், தமிழர் உரிமைகளை அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுவதில்லை. எனவே உங்கள் சமுதாயத்தில் உள்ள கட்சிகள் சிங்களவர்களின் உரிமைகளைத்தான் அங்கீகரித்து வருகின்றன. அவை, தமிழர்களின் தன்மானத்துக்கும், அடிப்படை சுதந்திரத்துக்கும் சவால் விடுவதாக அமைந்துள்ளதாக நாம் கருதுகிறோம்.

பண்டாரநாயகா காலத்திலிருந்து 22ஆண்டுகளாக சிங்கள இனவாதம், சிங்கள இனத்தின் மத்தியில் மிக ஆழமாக வேரோடி வளர்ந்துள்ளதால், இளம் சிங்களவர்களின் மத்தியில் நவீன சிந்தனைமாற்றம் எதுவும் ஏற்பட இடமில்லையென்பது தெளிவு;

1956ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம், சாதாரணமான சட்டநிலையிலிருந்து மாறி 1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பிலேயே ஓர் அங்கமாக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம், தமிழ் மொழியின் அழிவுக்கு வழிவகுக்கப் பட்டுவிட்டது. இந்த சிங்களம் மட்டும் என்ற அமைப்புக்குள் நின்று சிங்களவர் கட்சிகள் எதைச் செய்தாலும் தமிழ் தேசம் ஒன்று உருவாகவேண்டுமென்ற தமிழ் மக்களின் ஆத்மாவின் ராகத்தை திருப்திப்படுத்தி விட முடியாது. சட்டரீதியாக 'தமிழ் ஈழம் மலர்வதற்கு தமிழினத்தின்மீது நடைபெற்ற வன்முறைகளும். இனக்கொலையும் ஒரு பங்களிப்பு என்றே நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். இதுபற்றி செய்யப்படும் எந்தச் சமாதானமும், செயற்கையாகவும்,சட்டவிரோதமாகவுமே கருதப்படும்!

"எனவேதான் மனித கௌரவம், அரசியல் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில்-நீதியான ஒரு சமுதாயத்தை தமிழ் ஈழத்தில் உருவாக்கக்கூடிய வகையில் ஓர் சரியான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தி, தமிழ் ஈழ அரசை நிலைநாட்டுமாறு தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கடந்த தேர்தலில் அதிகாரம் கொடுத்துள்ளனர். முழுமையான மனித உரிமைகள்,குடியியல் உரிமைகள்,அடிப்படை சுதந்திரம்,சுயநிர்ணய உரிமை ஆகியவை சம்பந்தமாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை புரிந்துகொள்ளுமாறு தயவுசெய்து உங்களை வேண்டுகிறோம்."

## யாழ்ப்பாணத்தில் கல்வியமைச்சர் நிகழ்ச்சிகள்!

இந்த வாரம் (27, 28) யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் கல்வியமைச்சரின் நிகழ்ச்சிகள் வரையறுக்கப் பட்டுள்ளன. அவர் ஒஸ்மானியா கல்லூரியில் நடைபெறும் இக்பால் விழாவில் மட்டுமே பங்குபற்றுவதுடன், பௌத்த ஆலயங்களுக்கும் விஜயம்செய்வார். ஏனைய வரவேற்புக்கள் விருந்துகள் அனைத்தும் நிகழ்ச்சி நிரலிலிருந்து ரத்துசெய்யப் பட்டுவிட்டன.

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்:

நிகழும் பிங்கள வருடம் தை மாதம் 16-ம் திகதி (29-1-1978) ஞாயிற்றுக்கிழமை பகல் 12-56 மணி முதல் 2-47 மணிவரையிலுள்ள இடபலக்கின சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் செல்வரத்தினம் (பாட நூலாசிரியர்) அவர்களுக்கும் (மணமகன் சுதந்திரன் மூ. பாலசுப்பிரமணியம் அவர்களின் மைத்துனர்) | அப்புக்காத்து வளவு, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை, திருமதி. தங்கதேவி விஜயதெய்வேந்திரம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி கௌரி அவர்களுக்கும் |

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்களும், தங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
த. சிவலிங்கமும்
(ஓய்வு பெற்ற புகையிர அதிபர் பர்மா)
பாரியாரும்
அன்னகிரி, அளவெட்டி.

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ. சுதாகரன்,
சிரேஷ்ட மாணவ முதல்வர்,
யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி.

கே: பாடசாலைகளில் புகுத்தப்படும் மும்மொழித் திட்டத்தினால், ஏற்படும் விளைவைப் பற்றி சற்று விளக்கமாகக் கூறுங்கள்?

ப: சிங்களத்துடன் சம அந்தஸ்துள்ள ஆட்சிமொழி என்ற சட்டரீதியான அந்தஸ்து எதுவும் தமிழுக்கு இல்லாத காரணத்தினால், சிங்கள மாணவர்களுக்கு தமிழ் படிக்க வேண்டிய அவசியமோ தேவையோ கிடையாது. எனவே அவர்கள் தமிழ் படிக்க மாட்டார்கள். அப்படியின்றி அவர்கள் தமிழைப் படித்தாலும்கூட, அவர்களுக்கு அதனால் எது வித உரிமை இழப்பு ஏற்படப்போவதும் இல்லை. அதே சமயம், தமிழர்கள் தமது பாடசாலைகளில் சிங்களம்படிக்கத் தொடங்கினால் அவர்கள் இன்று அனுபவித்துவருகின்ற அற்ப சொற்ப உரிமைகளைக் கூட இழக்கின்ற ஆபத்து உண்டு. உதாரணமாக தமிழ் மூலம் கல்விபெறும் ஒரு தமிழ் மாணவன் அரசாங்க சேவைப் போட்டிப்பரீட்சைகளுக்கு தோன்றும்போது தனது தாய்மொழியான தமிழிலேயே எழுதும் உரிமை இன்று இருந்துவருகிறது. ஆனால் 1958ம் ஆண்டின் தமிழ்மொழி விசேட விதிகள் சட்டத்தின்படி, எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளிலும் சிங்களம் ஒரு பாடமாக புகட்டுவதற்குபோதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன என்று அரசாங்கம் கருதுமிடத்து, தமிழர்கள் அரசாங்க சேவைப்பரீட்சைகளுக்கு தமிழிலேயே எழுதுவதற்கு இன்று தரப்பட்டிருக்கின்ற உரிமையையில்லாமலாக்கி தமிழ் மாணவர்கள் உட்பட அனைவரும் சிங்களத்தில்மட்டுமே அரசாங்கசேவைப் பரீட்சைகளுக்கு தோற்றவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்க முடியும். சிங்களத்தை தாய்மொழியாகக்கொண்ட சிங்கள மாணவர்களுடன் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மாணவர்கள் போட்டியிட்டு சிங்கள மொழியிலே பரீட்சை எழுதிட முடியுமா? ஒருபோதுமே முடியாது. எனவே தமிழ் மக்கள் சிங்களம் படிப்பதன் மூலம், இன்று அவர்கள் அனுபவித்துவரும் அற்ப சொற்ப உரிமைகளும் பறிபோகும். அதுமட்டுமன்றி, 'தனிநாடு' என்று திட்டவட்டமாக முடிவுசெய்துவிட்ட நாம், நம்மீது ஆக்கிரமிப்பு நடத்தும் ஏகாதிபத்திய மொழியொன்றை எதற்காகப் படிக்கவேண்டும்?.

ஃ

செல்வன்,
சில்லாலை வடக்கு
பண்டத்தரிப்பு.

கே: பொத்துவில் தொகுதியில் சத்தியம் வென்றதா?

ப: கூட்டணி என்ற சத்தியம் அங்கு வென்றது உண்மை; இன்று அந்த சத்தியத்தை யூ. என். பி. என்ற சூது கவ்விவிட்டது. ஆனாலும், சத்தியம் மறுபடியும் அங்கு வெற்றி பெற்றே தீரும்;

ஃ

கனக. பரமேஸ்வரன்,
கொக்குவில் மேற்கு.

கே: தற்போதைய நிலையில் ஒவ்வொரு தமிழ் இளைஞர் யுவதிகளின் கடமை யென்ன?

ப: விடுதலை அமைப்புக்களில் சேர்ந்து, கட்டுப்பாட்டுடன் உரிய பயிற்சிகளை பெற்று, தாயகத்தை மீட்பதற்கு தம்மைத் தயார்படுத்திக்கொள்வதே!

கே: 1977 இலும்பார்க்க, 1978இல் எதிர்க்கட்சித்தலைவரின் பேச்சுக்கள் மிகவும் சூடாக இருக்கிறதே! தங்கள் கருத்தென்ன?

ப: ஆம், தாம் ஓரடி பின் வாங்குவதுபோல பாவனை செய்வது ஈரடி முன்னேறுவதற்காகத்தான் என்று அவரே முன்பு விளக்கம் கொடுத்திருக்கிறாரே!

ஃ

நிலா தமிழின் தாசன்
நிலாவெளி —3

கே: மாம்பழம்போல் குண்டுகளை மார்பினிக்க வாங்காமல் தமிழ் ஈழத்தை மீட்டு விடுவோம் என்று இனியும் நம்புகிறீர்களா?

ப: நான் முன்பு அப்படி நம்பியிருந்தால் அல்லவா இனியும் நம்புவதற்கு?

கே: உங்கள் எழுத்துக்கள் ஒரே சமயத்தில் கரும்பு போலவும், கனல்போலவும் இருப்பதன் மர்மம் என்ன?

ப: தமிழின் ஆற்றல் தான்!

ஃ

எஸ். விமலவன்ச,
சந்திவெளி

கே: தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு போட்டியாக ஒரு பழம் பெரும் அரசியல் வாதியின் தலைமையில் "தமிழர் விடுதலை முன்னணி" என்று ஒன்று கிழக்கில் உருவாகப்போகிறதாமே!

ப: அப்படியொரு 'திடீர்' முன்னணி அங்கு தோன்றினால் அது ஓர் குட்டி யூ. என். பி. யாகவே சிலகாலம் இருந்துவிட்டு பின்னர் யூ. என். பியுடன் இரண்டறக் கலந்துவிடும் என்பதை இப்போதே ஆருடம் கூறிவைக்க விரும்புகிறேன்.

ஃ

ராஜாத்தி,
யாழப்பாணம்.

கே: கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கனகரத்தினம் இப்படிக் காலை வாரிவிட்டாரே!

ப: அவர் உண்மையான கிழக்கு மாகாண மண்ணின் மைந்தராக இருந்திருந்தால் இப்படி காலைவாரி விட்டிருக்கமாட்டார். அவரது அடி அத்திவாரம் கிழக்கைச் சேர்ந்தது அல்ல என்பதை மறந்துவிடாதீர்கள். உண்மையான கிழக்குமாகாணத் தமிழன், தந்தை செல்வாவின் பாதையையும், தமிழர் விடுதலை இயக்கத்தையும் விட்டு என்றைக்கும் விலகமாட்டான்! கிழக்கின் அசல்வித்தாக இல்லாதவர்கள் தாம் இப்போது கிழக்கின் மதிப்பை மண்ணாக்கி வருகிறார்கள்!

ஃ

சு. சிவகுமாரன்,
நவாலி தெற்கு
மானிப்பாய்.

கே: காசிஆனந்தன், வண்ணை ஆனந்தன், சேனாதி ராஜா இவர்களில் உங்களுக்கு யாரைப் பிடிக்கும்?

ப: காசிஆனந்தனின் கற்கண்டுக் கவிதையும், வண்ணை ஆனந்தனின் நகைச்சுவை கலந்த பேச்சும், மாவை சேனாதி ராஜாவின் செயல் திறனும் எனக்குப் பிடிக்கும்!

ஃ

வி. விஜயரத்தினம்,
திருநெல்வேலி தெற்கு:

கே: கதிர்காமம் இராம கிருஷ்ண மடத்தை அரசு திருப்பித்தரும் என்றாரே தேவநாயகம், அது நடந்து விட்டதா?

ப: திரு. தேவநாயகம் ஆளப்படும் இனத்தைச் சேர்ந்தவர். அவர்கூறுவதை ஆளும் இனத்தவர்கள் எங்கே கேட்கப்போகிறார்கள்? கதிர்காம மடத்தின் கதை, ஆண்டிகள் கூடி மடம் கட்டிய கதைதான்!

ஃ

வெ. ஜெயகோபன்,
காரை தீவு.

கே: மூதறிஞர் தந்தை செல்வாவின் நினைவு முத்திரை ஒன்றை வெளியிடும்படி அரசிடம் தமிழர் விடுதலைக்கூட்டணி கோரினால் என்ன?

ப: தந்தை செல்வாவுக்கு நாம் வெளியிடக்கூடிய ஒரே யொரு நினைவு முத்திரை அவர் கனவுகண்ட சுதந்திரத் தமிழ் ஈழத்தை நிறுவுவதுதான்! தந்தை செல்வாவுக்கு இந்த அரசாங்கம் நினைவு முத்திரை வெளியிட்டுவிடுவதால் நாம் இனத்தின்மீது பொறிக்கப்பட்டுள்ள அடிமை முத்திரை துடைக்கப்பட்டு விடுமா?

ஃ

செ. மனோகரன்,
அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு-5.

கே: சொந்த அபிப்பிராய பேதங்களுக்காகவும்' நலன்களுக்காகவும் கொண்ட இலட்சியங்களையும், தாம் வளர்க்க வந்த கட்சியையும் கைவிடுபவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: பத்துமாதம் சுமந்து பெற்ற தாயின் இதயத்தை வெட்டியெடுத்து பதவி எனும் காதலிக்கு காணிக்கை கொடுக்க நினைக்கும் சண்டாளர்கள்!

ஃ

ஏ. எஸ். யோகன்,
சித்தங்கேணி,

கே; பொத்துவில் கனகர் த. வி. கூட்டணி தம்மை வற்புறுத்தியதால் போட்டியிட்டதாக கூறுகிறாரே!

ப; தனக்கு கூட்டணி நியமனம் பெற்றுத்தருமாறு பொத்துவில் தொகுதியில் உள்ள கூட்டணி பிரமுகர்களின் வீடுகளுக்கு இவர் அலைந்த அலைச்சலை பற்றி கனகர் இன்று மறந்திருக்கலாம்—ஆனால் பொத்துவில் மக்கள் இதற்குள் அதையெல்லாம் மறந்து விடவில்லை!

ஃ

பாடசாலை ஆசிரியை,
வாரியப்பளை பாடசாலை,
மாத்தளை.

கே: எமது தமிழ் மக்கள் மலையகத்திலும் வாழ்கின்றார்களே எதிர்கால நன்மைக்காகவும் சுதந்திரமாய் வாழவேண்டும் என்பதற்காகவும் தாங்கள் அவர்களுக்குக் கூறும் அறிவுரைகள் என்ன?

ப; மலையகத்தமிழ் மக்கள் மெல்ல மெல்ல தமிழ் ஈழத்துக்கு—அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு — வந்து குடியேற வேண்டும்! தமிழர் நாம் ஒரே பகுதியில் ஒன்றாகத் திரண்டு வாழ்ந்தால் மட்டுமே, நமது சுதந்திரத்தை நிலைநாட்டி. எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து வாழ முடியும்! அடம்பன் கொடியும் திரண்டாலே மிடுக்கு!

ஃ

இராஜலிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: கடந்த சுதந்திரனில் இயக்க அமைப்பு பற்றி கட்டுரை எழுதியிருந்த அந்தப் பழம் பெரும் தொண்டரின் பெயரைக் குறிப்பிட மறந்து விட்டீர்களே!

ப: ஆம், அக்கட்டுரையை எழுதியவர் கொக்குவில் மேற்கு வித்துவான் கந்தையா அவர்கள்.

ஃ

கே. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்;

கே: ஒரு நாட்டுக்குள் இன்னொரு நாட்டை சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கும் என்று கூட்டணி செயலதிபர் சிவா தேசிய பேரவையில் கூறியிருக்கிறாரே—இலங்கைக்குள் தனிநாடு கேட்கும் தமிழர் கூட்டணித் தலைவர் இப்படிப் பேசுவது கொள்கை முரண்பாடு ஆகாதா?

ப: செயலதிபர் சிவா பேசியிருப்பதில் தவறு ஒன்றும் இல்லை. இலங்கை ஒரே நாடல்ல; தமிழ் ஈழம் சிங்கள சிறிலங்கா என்ற இரண்டு நாடுகளைக் கொண்ட ஒரு தீவு என்பதே கூட்டணியின் அசையாத கொள்கை, 'சிங்கள சிறிலங்கா' என்ற நாட்டுக்குள் சுதந்திர வர்த்தக வலயம் மற்றோர் குட்டி நாடாகிவிடும் என்பதையே திரு. சிவசிதம்பரம் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

# சிங்களத் திணிப்பை முறியடிக்க மாணவர் படை தயார்!

சம்பத்திரிசியார் கல்லூரியில் மாணவர்களுக்கு சிங்கள மொழி படிப்பிக்கப்படுகிறதென்று புரளி கிளப்பி விடப்பட்டுள்ளது. இவ்வதந்தியில் எந்த விதமான உண்மையும் கிடையாது என சுதந்திரன் நம்பகமாக அறியவருகிறான். சம்பத்திரிசியார் கல்லூரியில் சிங்களம் படிப்பிக்கப்பட்டது பழையகதை இன்றைய மாணவர்களோ விடுதலைப் பண்பாடும் வீர மறவர்களாகத் திகழ்கிறார்கள்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் சிங்களம் படிப்பிக்கப்படுகிறது என்று மற்றொரு பரபரப்பான செய்தி மாணவசமுதாயத்தின் மத்தியில் தீவிரமாகப் பரவியுள்ளது. திடீர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் குதிப்பதற்கும் அவர்கள் தயாராகிவருவதாகச் சுதந்திரனுக்குச் செய்தி எட்டியதும், உடனே சுண்டுக்குளி மகளிர்கல்லூரி அதிபருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். நேரசூசிகையில் சிங்களப்பாடத்துக்கு இடம் ஒதுக்கப்பட்டதை ஒத்துக்கொண்ட அதிபர் கல்லூரியில் சிங்களவகுப்புக்கள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன என்ற கூற்றை மறுத்து விட்டார்.

பாடசாலைகளில் எங்கேனும் திடீரென சிங்கள வகுப்புக்கள் இரகசியமாக ஆரம்பிக்கப்படின் மறியல் இயக்கத்தில் குதிப்பதற்கு தமிழ் மாணவ சமுதாயம் விழிப்புடன் நிலைமையை நோட்டமிடுகிறது நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்களாக அல்ல; தமிழ்ஈழ விடுதலைப் போரைக் கெடுப்பதையோ தாம்கெட்டுப்போவதையோ தடுப்பதற்கு வளர்ந்துவரும் இன்றைய தமிழ் மாணவர் சமுதாயம் விழித்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதை சிங்களத் திணிப்புப் பற்றிய வதந்திகளின் உண்மையை அறிந்து கொள்வதில் அவர்கள் காட்டிவரும் தீவிரம் உணர்த்துவதாகவுள்ளது.

கல்வி அமைச்சின் பணிப்பின் மீது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சிங்கள வகுப்புக்கள் நேரசூசிகையில் இருந்து உடனடியாக அகற்றப்படாதவிடத்து இவ்வாரம் யாழ்ப்பாணம் வரும் கல்வியமைச்சர் கலந்து கொள்ளும் எந்தவொரு நிகழ்ச்சியில் தானும் கலந்து கொள்வதில்லை என்றும் அவற்றைப் பகிஷ்கரிப்பதென்றும் மாணவர்கள் திட சங்கற்பம் கொண்டிருப்பதாக சுதந்திரன் அறிய வருகிறான்.

பிரச்சினை எவ்விதம் சமாளிக்கப்படுமென்பது தற்போது முழுக்க முழுக்க சிங்களத் திணிப்பு கைவிடப்படுமென்ற கல்வி அமைச்சரின் அறிவிப்பையும், நேரசூசிகையிலிருந்து சிங்கள வகுப்புகள் நீக்கப்படுவதையும் பொறுத்ததாகவேயுள்ளது என்பது மாணவர்கள் எடுத்துக் கொண்டுள்ள நிலையாகத் தோன்றுகிறது:

மும்மொழித் திட்டத்தின் கீழ் சிங்களம் படிப்பிப்பதற்கு வாரத்துக்கு மூன்று வகுப்புக்களைநேரசூசிகையில் ஒதுக்கவேண்டுமென்று பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு அனுப்பிய சுற்று நிருபம் வாபஸ்பெறப்படாவிடில் தமிழ்மாணவர் நேரடி நடவடிக்கையில் இறங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகசேவை அமைச்சின் வெளியீடொன்றில்

# முஸ்லிம்களுக்கு அவமதிப்பு!

## சிங்களவர்கள் மத்தியில் இனத்துவேஷத்தை தூண்டிவிடுகிறது 'தர்மபால லிப்பி'

### இதை தடைசெய்ய 'தர்மிஷ்ட' அரசு நடவடிக்கை எடுக்குமா?

இலங்கைத்தீவின் பூர்வகுடிகளான தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என்றும், சிங்களவர்களின் படைகளில் கூலி வேலை செய்யவந்தவர்கள் என்றும் அவமதிக்கின்ற முறையில் வரலாறு திரிக்கப்பட்டு, அது தமிழ் பிள்ளைகளின் தொண்டைக்குள் 'சமூகக் கல்வி' என்ற பெயரில் பாடமாக புகட்டப்படுகிறது என்பதை சுதந்திரன் ஏற்கெனவே அம்பலமாக்கியிருந்தது. தமிழ் மக்கள் மட்டுமல்ல, தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட இஸ்லாமிய மக்களும் சிங்கள அரசின் சமூக சேவை கலாசார அமைச்சினுல் 1965ம் ஆண்டு வெளியிடப்பட்ட சிங்கள நூலொன்றில் எவ்வளவு கீழ்த்தரமாகவும், உண்மைக்கு முரணுகவும் எவ்வாறு அவமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை விளக்குகிறது இக்கட்டுரை. இவ்வாறுன நூல்களினுல்தான் சிங்களவர்கள் மத்தியில் தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான இனத்துவேஷம் திட்டமிட்டு வளர்க்கப்படுகிறது. இந்நூலைத் தடைசெய்ய அரசாங்கம் முன்வருமா?— ஆர்.

இந்நூல் 1965, ஜனவரி 17ஆம் திகதி அரசாங்க அச்சகததில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. சமூகசேவை கலாசார அமைச்சினுல் வெளியிடப்பட்ட சிங்கள மொழியிலான 'தர்மபால லிப்பி'எனும் இந்நூல் சிங்கள சகோதரர்களால் பெரிதும் போற்றிப் புகழப்படும் ஒருவரின் கட்டுரைகள், கவிதைகள், கடிதங்கள் என்பவற்றின் தொகுப்பாகும்,

இந்நூலில் முஸ்லிம்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள் என்போர் மிக மோசமாக விமர்சிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்களைப் பற்றி அவர் குறிப்பிடும்பொழுது 'முஸ்லிம்கள் எப்படிப்பட்டோர், முஸ்லிம்களின் உழைப்பு முறை எத்தகையது, முஸ்லிம்கள் சிங்களவரை எப்படி கணிக்கின்றனர் என்றெல்லாம் கீழ்க்காணும் விதத்தில் விளக்குகின்றுா:-

'சிங்களவர்கள் முட்டாள்கள்; எனவே, நாம் அவர்களுக்கு இனிப்புப்பண்டங்கள் ஏதேனும் கொடுத்து ஏமாற்றுவோம். அத்துடன் ஊருராய்காகங்கள் போன்று ஏதும் பொருட்கள்கொண்டு சென்று விற்போம்; பின்னர் குறைந்த விலையில் அறுப்புக்கான பசுக்கள் கிடைத்தால் அவைகளையும் எடுத்துக் கொள்வோம்' (பக்-23)

'சாயம் போகக்கூடிய தரம் குறைந்த புடவைகளைப் பொட்டணியாக கட்டிக் கொண்டு போய் கூடிய விலைக்கு விற்போம். வரும் வழியில் ஒரு முட்டையையோ, கோழியையோ கண்டால் அதையும் விடக் கூடாது. எப்படியோ சிங்களவரை ஏமாற்றி சிறு விலை கொடுத்து அவற்றையும் வாங்கிக் கொள்வோம்' (பக்;23)

'பின்னர் ஒருசிறுகடையை வாடகைக்கு எடுத்து, பொருள்களுக்கு ஒன்றுக்கு நான்காக விலை வைத்தும், ஏமாற்றியும், பொருள்களை விற்று, சிங்களவரை நாசமாக்கி நாம் நலம் பெறுவோம்'. (பக்;23)

இப்படிசிங்களவரை சுரண்டிப் பிழைப்பவர்கள் தான் முஸ்லிம்கள் எனவர்ணிக்கும் அவர் அதனுல் ஏற்பட்ட விளைவு இதுதான் என்கிறுர்.

'இதனுல் சிங்களவர்கள் தன்னுடையநாட்டிலேயே அடிமைகளாகி யுள்ளனர். பொருளாதார விருத்திக்கான வர்த்தகம் போன்றவை அந்நியர் கைக்குச் சென்று விட்டன'(பக்:27)

சிங்களவரை இந்தநிலைக்கு ஆளாக்கிய இந்த முஸ்லிம்கள் யார்?அவர் கூறும் விளக்கத்தைப் படியுங்கள்:

'இந்தியாவில் ஏழு கோடி முஸ்லிம்கள் உள்ளனர். அவர்கள் அந்த நாட்டில் முன்பிருந்த பௌத்தர்களும், இந்துக்களுமாவர்.

700 வருடங்களுக்குமுன்னர் இந்தியாவைக் கைப்பற்றிய அராபியர்கள் பலவந்தமாக பல கோடி மக்களைமுஹம்மதியர்களாக்கினர், தம்பதிவவில் இருந்த பௌத்தர்களும் முஹம்மதிய மார்க்கத்தை ஏற்றனர். விஹாரைகளிலிருந்த சகலபிக்குகளும் கொல்லப்பட்டதோடுஅவ்விஹாரைகளை முஸ்லிம்கள் தனதாக்கிக் கொண்டனர். அராபியர்கள் இந்தியாவிற்கு வருமுன் (தம்பதிவ) இந்தியாவின் முக்கிய விஹாரைகளில் இரண்டு இலட்சத்து அறுபதினுயிரம் பௌத்த பிக்குகள் இருந்தனர்.புத்தகாய, பர்னெஸ, நாலத்தாவ, ரஜகஹநுவர, பாட்டலீபுத்ர, செவத்நுவர, ஜேத்தவனுராமய என்பன் போன்ற இடங்களிலிருந்த விஹாரைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன." (பக்: 203)

'முழு ஆசியாவிலும் பௌத்த சாஸனம் ஒளி பெற்றிருந்தபோதுமுஹம்மதியர்கள் அதைநாசமாக்கினர்' (பக்: 231)

இவ்விதமாகசரித்திரத்தை திரித்துக் கூறி, முஸ்லீம்கள் மிகவும் மோசமானவர்கள் மிலேசத்தனமானவர்கள் — பலவந்தமாக மதமாற்றம் செய்தவர்கள் என படம் பிடித்துக் காண்பிக்க முயலும் இவர் சிங்களவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதையும் கூறத்தவறவில்லை.

'...எனவே,என்னுடைய நாடு, என்னுடைய சாதி, என்னுடைய மொழிஎன்ற உணர்வுடனும், வைராக்கியத்துடனும் சிங்களவர்கள் காரியமாற்ற முன்வரல் வேண்டும்.' (பக்: 30)

இவைபோன்ற பல கருத்துக்கள் பொதிந்துள்ள இந்நூல் ஒரு சாதாரண மனிதருடையதல்ல, சிங்களவர்களால் பெரிதும் மதிக்கப்படும் ஒருவருடையது. அடுப்பங்கரை முதல் ஆட்சிபீடம் வரையுள்ள எல்லா சிங்கள மக்களும் அவர்கூற்றைவேத வாக்கு என ஏற்கின்றனர். அப்படியானஒருவர்முஸ்லிம்களைப் பற்றி இப்படியான கருத்துக்கள்கூறும்பொழுது, அவை சிங்களவர்கள் மத்தியில்எத்தகைய துவேஷத்தை ஏற்படுத்தும் என்பதைப் பாருங்கள். "முஸ்லிம்கள் பௌத்த பிக்குகளைக் கொன்றவர்கள், விஹாரைகளை உடைத்து நாசமாக்கியவர்கள், சிங்களவர்களின் பொருளாதாரத்தை நசுக்கியவர்கள், பௌத்த சாஸனத்தையே நிர்மூலமாக்கியவர்கள்" என இவர் (தவருன) கருத்துக்களை புகுத்தி நல்ல சிங்களச் சகோதரர்களின் உள்ளங்களை நச்சுத்தன்மை உடையனவாய் மாற்றியுள்ளதை நாம் உணரமுடியாதா? அவற்றின் தாக்கம் தான் நம்நாட்டில்எமக்கெதிராக பலவகையான கிளர்ச்சிகள் எழக் காரணம்என்பதை எவரும் மறுக்க முடியுமா?

—(ஆதாரம்: "அல்ஹஸனுத்" (நவம்பர் 1977)

---

# சிங்கள மொழிப் போதனை குறித்து கொழும்பிலுள்ள இரு பாடசாலை அதிபர்கள் சுதந்திரனுக்கு அளித்த செவ்வி!

சிங்கள மொழியை தமிழ்ப் பாடசாலைகளில் புகுதத அரசு மேற்கொண்டு வரும்நடவடிக்கையை எதிர்த்து தீவிரமான போராட்டமொன்றை தமிழ் இளைஞர் பேரவைமேற்கொள்ளவிருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன்—சிங்கள மொழியைப் புகுத்தும் திட்டம் எந்த உருவில் வந்தாலும் அதனை எதிர்த்தொழிப்பது தான் தமிழ் மக்களுக்கு இன்றுள்ள முதல் கடமை என ஏற்கனவே சுதந்திரன் அறிவித்து விட்டது.

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பாடசாலைகளில் சிங்கள மொழியைப் புகுத்தும் திட்டத்தை எதிர்த்து போர் தொடக்கப்படும்போது கொழும்பு போன்ற இடங்களிலுள்ள தமிழ்ப்பாடசாலைகள் இப்போராட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்குமா?...நல்கக்கூடுமானுல் அதுஎம்முறையில் என்பன போன்ற பிரச்சினைகளையிட்டு கொழும்பில் சில பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுடன் பேசினேன் அவர்கள் சிந்திய கருத்துக்களை கீழே தருகிறேன்.

மேட்டுத் தெருவிலுள்ள புனித அந்தோனியார் பாடசாலையின் தலைமை ஆசிரியர் "சிங்கள மொழிப்பாடத்தை தமிழ் மாணவர் விலக்கவே முடியாதவாறு கட்டாய பாடங்களிலொன்ருக அமைத்திருக்கின்றுர்கள். கடந்த அரசாங்கங்கள் நடந்து கொண்டது போலல்லாமல் இந்த அரசு 'நவீன' முறையில் பிரச்சனையை உருவாக்கி உள்ளது என்ருர்,

அவர் தொடர்ந்து கூறுகையில்: — வடக்குக்கிழக்கிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளில் போராட்டம் தொடங்கப்படுமானுல் எதிரொலி எனது பாடசாலையிலும் கேட்கும். ஏனெனில் இந்தப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும், பெற்ருர் [illegible] சங்கமும் சிங்கள மொழிப் பாடத்தை எதிர்ப்பதென்று ஏற்கனவே தீர்மானித்துள்ளார்கள். அதனுல் போராட்டத்துக்குச் சாதகமான சூழலைத்தடுக்கவேமுடியாது என்ருர்.

புனிதஅன்னம்மாள் பெண்கள் பாடசாலையின் தலைவி கருத்து தெரிவிக்கையில் சிங்கள மொழியை எதிர்ப்பதில்தமிழ்ப்பேசும்மக்கள் மத்தியில் நிரந்தர திட்டங்கள் எதுவுமில்லை அதனுல் தமிழ்மக்கள் ஒருவேளை உணர்ச்சிபெறுவதும், மறுவேளை சோர்ந்து போவதுமான நிலையிலிருக்கின்ருர்கள். இன்றைக்கு தமிழ்ப் பெற்ருேர் தமது பிள்ளைகளுக்கு சிங்களக் கல்வியூட்டுவதற்கு இணக்கமான முறையில் வந்து கொண்டிருக்கின்ருர் கள். இதனைத்தவறென்று நான் சொல்லமாட்டேன். இது தமிழ்த் தலைவர்களின் சிந் [illegible] ஏற்பட்ட ஒரு நிலை. எனது பாடசாலையில் கல்வி கற்று வந்த பல மாணவிகள் இன்று சிங்களப்பாடசாலையில் குடிபுகுந்து விட்டார்கள். அது நிரந்தரமான உணர்ச்சியின்மையால் ஏற்படும் நிலை அல்லவா? என்ருர்:

வடக்குக் கிழக்கு தவிர்ந்த பிற பகுதிகளில் உள்ள பாடசாலைகள் போராட்டத்தை எப்படி மேற்கொள்வது? இதற்குத் தலைவர்களிடம் திட்டமெதுவும் உண்டா? என்று ஆசிரியர் ஒருவர் என்னிடம் வினவினுர்.

— நமது கொழும்பு நிருபர்

---

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் தை மாதம் 16-ந் திகதி (29-1-78) ஞாயிறு இரவு 9·மணி தொடக்கம் 11 மணி வரை வரும் சுப முகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| அரானி தெற்கு திரு. க. சின்னத்துரை தம்பதிகள் புத்திரன் திருநிறைச்செல்வன் நித்தியானந்தனுக்கும் | எமது புத்திரி திருநிறைச்செல்வி கலாஜோதிக்கும் |

நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அழைக்கின்ருேம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
B. அனந்ததேவன் தம்பதிகள்.
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்க சிங்களத்தை அடியோடு எதிர்ப்போம்!

# அன்னைத்தமிழின் அடிமை விலங்கொடிப்போம்!

**அன்பு நண்பா**

நம் குலம் அழிக்க வருகின்ற மும்மொழித் திட்டத்தை—இணைப்புமொழியென்ற போர்வையுடன் நமது இன மரபு அழிக்க வரும் ஏகாதிபத்திய சிங்களத்தை — எதிர்த்திடுவதென்றும், சிங்களம்படிப்பதனால் நமது இனத்துக்கும், மொழிக்கும் ஏற்படக்கூடிய கேடுபாடுகளை எடுத்து விளக்கும் கருத்தரங்குகளை தமிழ் ஈழத்தின் பட்டிதொட்டிகளெங்கும் நடத்தி, நமது மாணவ மணிகளைக்கொண்டு சிங்களத்தை நிராகரித்திட வைத்திடவும்—வலிந்து சிங்களம் புகுத்தப்பட்டால் அதை எதிர்த்துப் போராடுவதற்குரிய துணிவையும் தன்னம்பிக்கையையும் அவர்கள் நெஞ்சங்களில் வளர்ப்பதென்று 21-1-78ல் கூடிய விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு எடுத்துள்ள திட்டவட்டமான தீர்மானத்தை ஏடுகளிலே படித்திருப்பாய்; அது கண்டு எத்துணை தூரம் பூரித்திருப்பாய்; எப்பக்கம் வந்திடும் சிங்களம் அது எத்தனை பட்டாளம் கூட்டிவரும் என்று போர் முரசு வேறு கொட்டியிருப்பாய் என்பதை நான் அறிவேன்.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் பேரணியாம் கூட்டணிக்குள்ளே உட்பூசல்களையும் போட்டியையும் ஏற்படுத்தி — அதன் மூலம் இன ஒற்றுமையை சிதறடித்திட — நச்சேடுகளும், நல்ல மனமற்றோரும் என்னதான் முயன்றாலும்; கூட்டணியில் இன்னும் சில கனகரத்தினங்களை உருவாக்கிட சிங்கள ஏகாதிபத்தியம் பதவி வலைகளை வீசிப்பார்த்தாலும்; தான் ஏற்றுக் கொண்ட தீர்க்கமான, தெளிவான பாதையை விட்டு கூட்டணி அங்கும் இங்கும் விலகாது—தமிழ் தேசிய இனத்துக்கு சென்ற பொதுத்தேர்தலின்போது வாக்களிக்கப்பட்ட 'சுதந்திரத்தமிழ் ஈழம்' என்றஇலட்சியநோக்கிலிருந்து கூட்டணி வேறு பக்கம் திரும்பாது; அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் "தமிழ் ஈழம்" என்ற இலட்சியத்தை நோக்கி தமிழ் மக்களை எடுத்துச் செல்வதாகவே அமையும்; கூட்டணியை வேறுபாதையில் திருப்புவதற்கு கூட்டணியிலுள்ள கொள்கை வீரர்கள் கிஞ்சிற்றும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை மும்மொழித்திட்டத்துக்கு எதிராக கூட்டணி எடுத்திருக்கும் உறுதியான தீர்மானம் எடுத்துக் காட்டி விட்டது!

ஆம், மும்மொழித்திட்டத்தை எப்படியும் முறியடித்தே தீருவதென்பதிலும், ஆதிக்க சிங்களம் எந்த வடிவத்தில், எந்த முகமூடியுடன், எந்தப் பெயருடன் வந்தாலும், அதை எதிர்த்துப் போராடியேதீர வேண்டுமென்பதிலும், கூட்டணியிலுள்ள அனைவருமே ஒத்த கருத்தும், ஒரே சிந்தனையும் உடையவராக காணப்பட்டதை நடவடிக்கைக்குழுவில் நான் கண்டேன்; மெத்தமகிழ்ச்சி கொண்டேன்.

"தமிழுக்கு மொழியுரிமை கிடைத்தால் நாம் சிங்களம் படிப்போம்; சமத்துவம் கிடைத்தால் சிங்களம் படிப்போம் என்றெல்லாம் நாம் கூறிக்கொண்டிருந்த காலம் இப்போது மலையேறி விட்டது. இப்போது நாம் பூரண சுதந்திரம் — சுதந்திரத்தமிழ் நாடு கோருகிறோம். தனிநாடு கோரும் நாம் ஒரு போதுமே சிங்களம் படிக்க வேண்டியதில்லை—படிக்க வேண்டிய தேவையுமில்லை; அவசியமும் இல்லை; சிங்களம் எமக்கு எக்காலமும் வேண்டியதே இல்லை!"

என்று நமது சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் நடவடிக்கைக் குழுவில் தந்த விளக்கம்—தமிழ் சமுதாயத்தின் இன்றைய மனோநிலையை விளக்கப் போதுமானதாகும்!

> "சிங்களம் படித்த முஸ்லிம் இளைஞர்கள் இன்று சிங்களவர்களுடன் சிங்களத்தில் போட்டி போட்டு வேலை ஏதும்பெற முடியாத நிலையில், சிங்களம் படித்ததனால் தங்கள் எதிர்காலத்தையே இழந்து நிர்க்கதியாகியுள்ளனர்; அதே சமயம் தமிழ் மூலம் படித்த முஸ்லிம் இளைஞர்கள், சிங்களம் படித்த முஸ்லிம் இளைஞர்களை விட இன்று நல்ல நிலையில் இருக்கின்றனர். இது அனுபவித்து நாம் கண்ட உண்மை. எனவே சிங்களம் படிப்பதால் இருக்கின்ற உரிமைகளும் வாய்ப்புக்களும் கூட இல்லாமற் போகின்ற ஆபத்து ஏற்படும்"

என்று எச்சரிக்கை விடுத்தார் கல்முனையைச் சேர்ந்த சகோதரர் சட்டத்தரணி சம்சுதீன். ஆம், சிங்களத்தில் படித்து விட்டு சிங்களப் பாடசாலைகளுக்கு படிப்பிக்கச் சென்ற இஸ்லாமிய சகோதரர்கள், 'மரக்கலா அப்பிட்ட எப்பா' என்று சிங்களவர்களால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவத்தை நீ மறந்திருக்க மாட்டாயல்லவா?

நண்பா, மும்மொழித்திட்டத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் சமுதாயமும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த பின்னர் கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின சற்று இறங்கி வந்து புதியதோர் இராகத்தைப்பாடியிருக்கிறார் 24-1-78 வீரகேசரியில்—

> "மும்மொழித்திட்டம் என்ற போர்வையில் தமிழ் மாணவர்கள் மீது சிங்களம் திணிக்கப்படுகிறது என்று கருதுவதோ, பிரசாரம் புரிவதோ விதண்டா வாதமாகும்; தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை, சிங்களத்தை அவர்கள் தமது சுயவிருப்பத்தின் மூலம் மட்டும் கற்கலாம் — கட்டாயம் கற்கவேண்டுமென்று கல்வியமைச்சோ அல்லது பாடசாலை அதிபர்களோ கட்டளை பிறப்பிக்க முடியாது".

இவ்வாறாக கூறியிருக்கிறார் கல்வியமைச்சர். அதாவது—மும்மொழித்திட்டத்துக்கு, சிங்களத் திணிப்புக்கு நாம் காட்டிய வேகமான எதிர்ப்பு இவ்வாறு அவரைப் பேசவைத்திருக்கிறதே தவிர—சிங்கள ஊடுருவலின் ஆபத்து இதனால் கிஞ்சிற்றும் தீர்ந்தபாடில்லை!

## அரசியல் மடல்

மாணவர்களுக்கு மிகவும் முக்கியமான அறிவியல், வர்த்தகம் போன்ற பாடங்களுக்கான நேரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டு, அந்தப் பாட நேரங்கள் வேண்டாத சிங்களத்துக்கெனப் பாடத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறதே—விஞ்ஞானம் படிக்க வேண்டிய நேரத்தில், இலக்கிய செல்வமோ, அறிவியல் விருந்தோ, மெய்ஞான விளக்கமோ, வேறு சிறப்புக்களோ எதுவுமற்ற வேண்டாத சிங்களத்தை படிக்க வேண்டுமென்று பாடத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதே—இவையெல்லாம் ஏன்? சிங்களம் படிப்பதற்கு தமிழ் மாணவர்கள் தூண்டப்படுகிற முயற்சி இது அல்லவா? இத் தூண்டுதலில் நமது இளைய சமுதாயம் — விடுதலை உணர்வு படைத்த மாணவ சமுதாயம் வீழப்போவது இல்லை; வீழ்வதற்கு நாம் விடவும் மாட்டோம்!

விருப்ப பாடம் என்ற பெயரில் என்றாலும் சரி—வேறு எந்தப் பெயரில் என்றாலும் சரி—சிங்களத்தை ஒரு பாடமாக நமது தமிழ்ப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கத் தொடங்கியவுடன் என்ன நடைபெறும்? இன்று தமிழுக்கு இருக்கின்ற அற்பசொற்ப உரிமைகள் யாவும் இல்லாமற் செய்யப்படும். இந்த உண்மையை சிங்கள அரசாங்கத்தின் மொழி சம்பந்தமான சட்டதிட்டங்கள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

இந்த நாட்டின் மொழிச் சட்டங்களாக, சிங்களம் மட்டும் சட்டமும் தமிழ் மொழி (விசேஷ விதிகள்) சட்டமும், (நம்மால் நிராகரிக்கப்பட்டுவிட்ட—ஆனால் நடைமுறையிலிருக்கும்) அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கின்றன; இதில் தமிழ் மொழி (விசேஷ) விதிகள் சட்டத்தில் 'அரசாங்கசேவை' எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பகுதி இதோ—

> "தமிழ் மொழியில் பயிற்றப்பட்ட ஒருவர், அரசாங்க சேவையில் அமர்த்துவதற்கான பரீட்சையில் அம்மொழியிலேயே பரீட்சிக்கப்பட அருகதை பெறுவார் எனினும், இது சம்பந்தமாக இச் சட்டத்தின் கீழுள்ள விதிகட்கிணங்க பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டாக வேண்டும்—அவை யாவன;
>
> (1) இலங்கையின் அரசாங்க மொழியில் (சிங்களத்தில்) போதிய அளவு அறிவு பெற்றிருத்தல் வேண்டும்—அல்லது.
>
> (2) அரசாங்க சேவையில் நியமிக்கப்பட்டபின், குறிப்பிட்ட காலவரைக்குள் இவ்வறிவினைப் பெற்றுவிடவேண்டும்.
>
> ஆனால் தமிழ் மொழியில் போதிக்கும் பாடசாலைகளில் சிங்கள மொழியினைப் பயிற்றப் போதிய வசதிகள் இருக்கின்றன என்றும் மேலேயுள்ள இரண்டாவது நிபந்தனையை நீக்கின் கஷ்டம் ஏற்படாது என்றும் அரசாங்கம் திருப்திப்படும்போது இந்த ஷரத்துக்கள் செல்லாதென விதி வகுக்கப்படலாம்."

நண்பா, இதுதான் சட்டம். அதாவது எல்லாத் தமிழ்ப்பாடசாலைகளிலும் சிங்களம் ஒரு பாடமாக பயிற்றப்படுகிறது என்ற திருப்தி அரசாங்கத்துக்கு ஏற்பட்டுவிடுமானால்—தமிழர் ஒருவர் அரசாங்க சேவைப் பரீட்சைகளுக்கு தமிழில் எழுதமுடியாது—சிங்களத்தில் தான் எழுதவேண்டும் என்று அரசாங்கம் சட்டம் கொண்டுவரமுடியும்! அப்படியொரு சட்டம் கொண்டுவரப்பட்டுவிட்டால், சிங்களத்தை தாய்மொழியாகக் கொண்ட சிங்களவர்களுடன் சிங்களமொழியில் போட்டியிட்டு தமிழன் பரீட்சைஎழுதமுடியுமா? அப்படி எழுதினாலும், தமிழனால் வெற்றிபெறமுடியுமா? ஒருபோதுமே முடியாது. இந்த நிலையில், தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்கும் சிங்கள போதனைக்கும் நாம் இடந்தருவோமானால்—கையில் விளக்குடன் கிணற்றுக்குள் விழுந்த குருடராகவே மதிக்கப்படுவோம்!

சிங்களம் படிப்பதனால் அரசாங்கசேவைப் பரீட்சைகளுக்கு தோற்றுகின்ற எதிர்காலச் சந்ததிக்கு நேரப்போகின்ற கதி இது! அரசாங்கசேவையைத்தான் விடுவோமென்றால் சாதாரண தமிழ்க் குடிமகனின் நிலையென்ன? சிங்களம் படிப்பதனால், அவன் எவ்வளவுதூரம் பாதிக்கப்படுவான் என்பதையும் நாம் எண்ணிப்பார்த்திடவேண்டும்!

இப்போது தமிழில் அரசுடன் தொடர்பு வைக்கும் தமிழர்களுக்கு அரசு அனுப்பும்பதில்கள், ஒப்புக்காக ஒன்றிரண்டாவது தமிழ் மொழிபெயர்ப்புடன் அனுப்பப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ் மொழிபெயர்ப்பு அனுப்பப்படும் திட்டம் எதுவரைகாலம் அமுலில் இருக்கும்? இதோ அதை சிங்களம் மட்டும் சட்டம், தமிழ்மொழி (விசேஷ விதிகள்) சட்டம் ஆகியவற்றின் மூலவரான காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா விளக்குகிறார். தமிழ் மொழி விசேஷ விதிகள் மசோதாவை விளக்கி 1958ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதி பாராளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்—

"தமிழில் அரசாங்கத்துடன் கடிதத் தொடர்பு வைக்கும் உரிமை ஒரு தமிழருக்கு இருத்தல்வேண்டும், ஆனால் அவ்வுரிமை சிங்களம் உத்தியோகமொழியாக இருப்பதற்கு குந்தகம் விளைக்காமல் இருத்தல்வேண்டும்; அவருக்கு சிங்களத்தில் பதில் அனுப்பப்படலாம். எனினும் அவருடைய சௌகரியத்துக்காக தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றும் அத்துடன் இணைக்கப்படும். தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்கப்படும் காலங்களில் தமிழ் மொழி பெயர்ப்பையும் சேர்த்து அனுப்பும் வழக்கத்தை மெதுவாகக் கைவிட்டு விடலாம்; அதில் ஏதாவது தவறு இருக்குமென்று நான் நினைக்கவில்லை."

ஆம் நண்பா, தமிழர்கள் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் படிக்க ஆரம்பித்துவிட்டால், அதன்பின் தமிழ் முற்றாக ஒழிக்கப்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூரில் அமரர் நாகநாதன் நினைவு விழா

## நினைவுச் சின்னம் நிறுவப்படும்!

தமிழினத்தின் நல்வாழ்வுக்காக உழைத்து உயிர் நீத்த அமரர் டாக்டர் நாகநாதனின் பிறந்தநாள் சனவரி 31ஆம் நாள் வருவதையொட்டி பெப்ரவரி 5 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நல்லூரில் அன்னாரை நினைவு கூருமுகமாக விழா ஏற்பாடுகள் நடைபெறுகின்றன,

இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக அமரர் நாகநாதனைப்பற்றி திரு. கரிகாலன் எழுதிய "மெழுகுவர்த்தி" என்ற நூல் அன்று வெளியிடப்படும் இந்நூல் ஒரு சுதந்திரன் வெளியீடாகும். அத்துடன் அமரர் நாகநாதனுக்குயாழ்ப்பாணத்தில் நினைவுச்சிலையொன்றை நிறுவுதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இச்சிலையை நிறுவுதற்கான நிதியைத் தந்துதவ நல்லூர்த் தொகுதியைச் சேர்ந்த டாக்டரின் நண்பர்கள் முன் வந்துள்ளனர். இது குறித்து ஆலோசிப்பதற்கென அடுத்த வாரம் சட்டத்தரணி திரு. மு. ஆலாலசுந்தரம் கட்சிப் பிரமுகர்களை கொண்ட ஒரு ஆலோசனைக் கூட்டத்தை கூட்டுகிருர்.

# அமரர் மாணிக்கவாசகர் நினைவுக் கூட்டம்

கல்குடா முன்னுள் பா.உ. அமரர் மாணிக்கவாசகரின் இரண்டாவது சிரார்த்த தினக் கூட்டம் 28-1-78 கிரானில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். திருவாளர்கள் சூசைதாசன், யோகேஸ்வரன், இராசலிங்கம், கா. பொ. இரத்தினம் ஆகியோர் கலந்து கொள்கிருர்கள். சனி ஞாயிறு இரண்டு தினங்களிலும் சித்தாண்டி, முறக்கட்டான் சேனை, சந்தி வெளி, கிரான், வாழைச் சேனை, கறுவாக்கேணி, கிண்ணையடி ஆகிய கிராமங்களில் கருத்தரங்குகள் நடைபெறும். த. வி. கூ. கிளைகள் புனரமைப்புச்செய்யப்படும்.

# சுதந்திர சூரியன் அண்ணு



சூழ்ந்திருந்த இருளைச்
சுடடெரித்த
சுதந்திர சூரியன்!
வீழ்ந்திருந்த நாட்டை
விழிக்கச் செய்த
விடி வெள்ளி!
வாழ்ந்திருந்த காலம்
வரலாறு, பெருமை
வளமெல்லாம்
ஆழ்ந்த தம் அறிவால்
அழகாகச் சொன்ன
அறிஞர் அண்ணு!

மொழி என்னும் உணர்வை
மூலைக்குமூலை
மூட்டியோன்!
பழி ஏது வந்தாலும்
பகுத்தறிவெங்கும்
பரப்பியோன்!
வழி ஒன்று செய்து
வழுவாது அதிலே
வாழ்நாளெல்லாம்
ஒளியாகத் திகழ்ந்தோன்
ஓங்கு புகழ் அண்ணு
ஒப்பரிய செல்வம்!

அண்ணு எனும் ஆதவன்
அஸ்தமமாக
அதை எதிர்பாராக்
கண்கள் பல கோடி
கதறி மிக அழும்;
கவிந்தது பேரிருள்!
மண்ணுலகில் தமிழர்க்கு
மாமகனன் அவனே
மறைந்ததினுல்,
என்னென்ன துன்பங்கள்
எந்தமிழ்த் தாய்க்கு
எப்படிச் சொல்வேன் நான்!

—கவிஞர் வாகரை வாணன்

# மகளிர் பேரவை தீர்மானங்கள்

தமிழ்மகளிர் பேரவையின் செயற் குழுக் கூட்டம் 23.1.78ல் யாழ் கூட்டணி செயலகத்தில் திருமதி ராசேஸ்வரி வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(1) மும்மொழித்திட்டத்தில், த.வி.கூ.எடுத்த முடிவை தமிழ்மகளிர்பேரவை பூரணமாக ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு கல்லூரியிலும் மும்மொழித் திட்டத்தை எதிர்ப்பதற்கு மாணவர்கள் அணி அமைக்கப் பட வேண்டுமென்றும், ஒவ்வொரு கல்லூரியிலும் இந்தமாணவர் அணி அங்கு நடக்கும் அநியாயங்களை எதிர்க்க வேண்டுமென்றும், தமிழ் மகளிர் பேரவை கேட்டுக் கொள்கிறது.

(2) சுதந்திர தினமான பெப்ரவரி 4ம் திகதி நடைபெறும் அரசாங்கக் கொண்டாட்டங்களிலும் களியாட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டாமென தமிழ்பொது மக்களை மகளிர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

# "எத்தனை காலம்தான் ஏமாற்றுவீர் இந்த நாட்டிலே?"

## அரசியல் நடிகர் கனகரத்தினத்துக்கு ஒரு கேள்வி!

"பொத்துவில்தொகுதி சம உறுப்பினர் திரு. எம். கனகரெத்தினம் அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வலிந்து ஐ. தே. க. ஆதரவாளனுகிய தன்னை தங்கள் கட்சியிற் போட்டியிட வேண்டுமென்று கேட்டதால்தான் தான் த. வி. கூ. சார்பில் தேர்தலில் போட்டியிட்டேன் என அளவெட்டியில் பேசியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்ததை வாசித்தபோது இப்படியும் இலைச் சோற்றுக்குள் முழுப் பூசனிக்காயை மறைக்க முயலும் மனிதர்கள் இருப்பார்களா? என எண்ணவேண்டி இருக்கிறது.

"1977 ஏப்ரல் 10ந் திகதி இரவு எமது இயக்கத்தில் பொருளாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. அவர்கள் கல்முனை வாடிவீட்டில் தங்கியிருந்தபோது, காரைதீவு விநாயகபுரம் கோமாரி பொத்துவில் தம்பிலுவில் முதலிய கிராமங்களிலுள்ள கூட்டணி உறுப்பினர்கள் சகிதம் திரு. கனகரெத்தினம் அவர்கள் இரவோடிரவாக வந்து கதிரவேற்பிள்ளை அவர்களிடம் தன்னைக் கட்சியிற் சேர்த்துப் பொத்துவில் தொகுதிக்கு வேட்பாளராக நியமிக்கும்படி வேண்டிக் கொண்டதைக் கனகர் மறந்தாலும் நாங்கள் மறுப்பதற்கில்லை.

"உறுப்புரிமைப் படிவமும் வேட்பாளர் மனுப்பத்திரமும் திரு. கந்தையா நொத்தாரிசு அவர்களின் உதவியுடன் நிரப்பிக் கதிரவேற்பிள்ளை அவர்களிடம் கொடுத்தபோது "இதை நான் நடவடிக்கைக்குழுவிடமும் வேட்பாளர் நியமனக் குழுவிடமும் கொடுக்கிறேன் அவர்களின் முடிவே முடிவானதாகும்" எனக் கதிரவேற்பிள்ளையவர்கள் கூறியதைத் கனகர் மறுக்கமுடியுமா இல்லை மறந்துவிடாரா?

"ஐ. தே. க. தங்கள் கட்சியின் சார்பில் வேட்பாளரை நிறுத்தியிருக்கையில் அதன் தலைவர்கள் பொத்துவில் தொகுதியில் எம். சி.யை ஆதரியுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்கள் எனக் கனகர் கூறுவது கேள்வரகில் நெய்வடியும் கதையாய் இருக்கிறது. பொய்யைச் சொன்னுலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? தான் நேர்மையுள்ளவராய் இருந்தால் ஐ. தே. க. அமைப்பாளன் நான் என்று வெளிப்படையாய்க் கூறியிருக்கலாம்.

"வண்ணை ஆனந்தனை மற்றத் தொகுதிகளுக்கும்போக விடாது கூட்டணிப் பிரசாரம் செய்யத் தன்னுடன் வைத்துக் கொண்டதேன்? மட்டுநகர் முதல்வர், சட்டத்தரணி சாம்தம்பிமுத்து, கலாதம்பிமுத்து, சட்டத்தரணி ஹாஸீம், சட்டத்தரணி சம்சுதீன், அஷ்றப் இன்னும் என்போன்றவர்களையும் கூட்டணித் தேர்தற் பிரசாரத்தில் ஈடுபடும்படி கேட்டுக்கொண்டதேன்? டாக்டர் உதுமாலெவ்வை அவர்களைப் பொத்துவிலில் முகாமிட்டு வேலைசெய்யத் தூண்டியதேன்? தலைவர் அமிர்தலிங்கம் அவர்களைக் காரைதீவு தொடக்கம் பொத்துவில்வரை கூட்டணிக் கொள்கைவிளக்கத்துக்கு வலிந்து கூப்பிட்டுப் பயன்படுத்தியதேன்?

"5-3-77ல் பொத்துவிலுக்குக் கூட்டணித் தலைவர்களை அழைத்து வரவேற்று தனது வீட்டில் இரண்டறக்கலந்ததேன்? வெளி வேடத்தைக் கண்டு ஏமாந்தோம்: கைதேர்ந்த நடிகர் கனகரெட்ணம் அவர்களே' ஏமாற்றியவர்கள் ஏமாறுவர்; காலம் விடையிறுக்கும் பொறுத்திருந்துபார்ப்போம்.

"பொத்துவில் மக்கள் கூட்டணிக்கே, அதன் கொள்கைக்கேவாக்களித்தனர் என்பதை நீங்கள் மறந்தாலும் உங்கள் மனச்சாட்சி இடித்துரைக்கும்.

— இவ்வாறு பொத்துவில் தொகுதி கூட்டணி அமைப்பாளர்களில் ஒருவரும் நடவடிக்குழு உறுப்பினருமான அக்கரைப்பற்று சிவஸ்ரீ எல். சிவஞானக் குருக்கள் சுதந்திரனுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

# புதிய கட்டடத் திறப்பு விழா

மன்னூர் கற்கிடந்த குளம் றோ.க.த.க. வித்தியாலய விளையாட்டுப் போட்டியும் முத் தமிழ்க் கலை விழாவும் 30-1-78ல் கற்கிடந்த குளம் திறந்த வெளியரங்கில், மன்னூர்பிரதமகல்வியதிகாரிதிரு என். சி. கருணனந்தன் தலைமையில் நடை பெறுகின்றது. பிரதம அதிதியாக மன்னூர் அரசாங்க அதிபர் திரு.என். ஜெகநாதன் கலந்து கொள்கிருர். மன்னூர் பா.உ திரு பி.எஸ். சூசைதாசன், அருட் திரு.தேவராஜன் அடிகளார், உட்பட பலர் உரையாற்றுகிருர்கள். வரவேற்புரையை கற்கிடந்தகுளம் றோ.க.பாடசாலை அதிபர் திரு.ஏ.அந்தோனிமுத்து நிகழ்த்துகிருர்.

# அரசியல் மடல்...

—4-ம் பக்கத் தொடர்

படும்; தனிச் சிங்களமே நாட்டை ஆளும். இதுவே சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சித் திட்டமாகும்.

இது பண்டாரநாயகாவின் கொள்கை— யூ. என். பி: அப்படிச் செய்யாது— ஜே. ஆர். அவ்வாறு செய்யமாட்டார் என்று யாராவது கூறக்கூடும்; ஆனுல் அதே பண்டாரநாயகாவின் வாரிசுகள் மீண்டும் இந்நாட்டில் ஆட்சிக்கு வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

அதுமட்டுமல்ல—இந்த நோய்க் கெல்லாம் மூலகாரணமானதும், தமிழினத்தை அவமானப்படுத்தி. இரண்டாந்தரநிலைக்குத் தள்ளியதுமான சிங்களம்மட்டும் சட்டத்தை மாற்றியமைத்திட மாட்டேன் என்று தார்மீகம் பேசும் ஜே. ஆர், அவர்களே தேசிய அரசுப்பேரவையில் திட்டவட்டமாக அறிவித்துவிட்டபின்னர்— ஆதிக்க மொழியான சிங்களத்தை மானமுள்ள எந்த ஒரு தமிழனுவது படித்து தனக்குத்தானே சவக்குழி தோண்டிட முன்வருவானு?

எனவே நண்பா, ஆதிக்க சிங்களம் எந்த வடிவில்—எந்த நிலையில், எந்த உருவில் வந்தாலும், அதை எதிர்த்துநிற்போம்—சிறிய பாம்பு என்றுலும்பெரிய தடிகொண்டுஅடிக்கவேண்டுமென்பார்கள். நம் இனத்தையும், மொழியையும் மரபையும் அழித்திட வரும் ஆதிக்க மொழியான சிங்களப் பாம்பை அடித்து விரட்டுவோம்! அன்னைத் தமிழின் அடிமை விலங்கொடிப்போம்! என்கிற உறுதியுடன் விடுதலைப் பயணத்தை தொடர்வோம்!

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

"சிக்கனமே சிறந்த செல்வம்"

சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார் சோப்:

பெரிய பார் சோப்பும், சிறிய பார் சோப்பும் விற்பனையாகின்றது. வாங்கி உபயோகியுங்கள். 8 மேலுறைகளை அனுப்பி காந்திக் கலண்டரை அல்லது மில்க்வைற்-செய்தியை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழத்தமிழனுக்கு மேலும் இன்னல் நேர்ந்தால் அவன் கண்ணீரைத் துடைக்க கடல்கடந்து வருவோம்!"

## தமிழ்நாட்டு இளைஞர்கள் இவ்வாறு கூறியதாக தமிழ் பண்பாட்டு மாநாட்டு பிரதிநிதிகள் தகவல்!

கடந்த மார்கழி மாதம் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதிகளாகப் பங்குபற்றி உலகத் தமிழர் கவனத்தையெல்லாம் ஈழத்தமிழர்பால் திருப்பிவிட்டு ஈழம் மீண்ட திரு. வேந்தனார் இளங்கோ திரு. க. இராஜமனோகரன் ஆகியோருடன் கருத்துப்பரிமாறலை மேற்கொள்ளுமுகமாக கடந்த 18.1.78 புதன் கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. மேற்படி கருத்தரங்கிற்கு தமிழ் ஏந்தல் திரு. ஈழவேந்தன் அவர்கள் தலைமைதாங்கினார்கள். செல்வி திலகவதி கணபதிப்பிள்ளையின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலுடன் ஆரம்பமான கருத்தரங்கில் திரு. ஹண்டி பேரின்பநாயகம் அவர்களுக்கு 2 நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு: ஈழவேந்தன் அவர்கள் தமது தலைமையுரையில்,—

"அண்மையில் நடைபெற்ற தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டில் பங்குபற்றிய இளம் தலைவர்களான திரு. இளங்கோ அவர்களும் திரு. இராஜ மனோகரன் அவர்களும உலகின் கவனத்தை ஈழத்தமிழர் பால் இவ்வளவு தூரம் ஈர்த்துவிடமுடியுமாயின். மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதிர்ந்த தலைவர்கள் தமிழக மக்கள் மத்தியில் பொதுமேடை ஒன்றை அமைத்து இச்சந்தர்ப்பத்தை ஏன் எமக்கு சாதகமாகப் பயன்படுத்த முயலக்கூடாது? கடந்த ஆகஸ்ட் கலவரத்தின் பின் ஈழத்தமிழர்களது கண்ணீர் துடைத்திட துடித்தெழுந்து நிற்கும் தமிழக மக்களது நேசக்கரங்களைப் பற்றிப் பிடித்திடக் கூடிய இத்தருணத்தை எம் தமிழ்த் தலைவர்கள் தவறவிட்டுவிடாது சரியான முறையில் பயன் படுத்திட வேண்டும்" என்றார்.

### மும்மொழித் திட்டம்

அவர் மேலும் பேசுகையில், "சிங்களவர்களும் தமிழ் படிக்கமுனையும் இவ்வேளையில் தமிழர்கள் மும்மொழித்திட்டத்தைப் பகிஸ்கரிப்பது பிற்போக்குத்தனம் என சிலர் கூற முற்பட்டிருக்கிறார்கள். ஜே. ஆரின் போக்கு சிக்கலான புரியாத புதிராக வுள்ளது. இன்றைய சூழ்நிலையில் தமிழன் சிங்களம் படிக்க ஒரு அடி எடுத்து வைத்தாலே இதுவரை அரைகுறையாக வழங்கப்படும் தமிழ் மொழி பெயர்ப்புகள்கூட மாயமாய் மறைந்துவிடும். யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி போன்ற ஒரு சில பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாகப் போதிக்கக்கூடிய வகையில் நேரசூசிகையில் மாற்றம் செய்யப்பட்டு பீடிகை போடப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள மொழியைக் கற்பிக்குமுகமாக 7000 சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப்பகுதிகளில் குடியேற்றப்பட விருப்பதாக அறிகிறேன். இதுவே காலப்போக்கில் சிங்களப்பாடசாலைகளும் அதைத்தொடர்ந்து பௌத்த விகாரைகளும் தோன்ற இது கால்கோள் இடும். இதன் விளைவாக சேருவில, அம்பாறை போன்ற தனிச்சிங்கள தொகுதிகள் மேலும் பல தமிழ் ஈழத்தில் தோன்ற அடித்தளமாக அமையும். யாழ்ப்பாணத்தில் "மணியத் தோட்டம்" என்று மணித் தமிழால் அழைக்கப்பட்ட இடம் "அமரசேகரபுர" என அலங்கோலமானதுபோல் எத்தனையோ "சிங்களபுரங்கள்" தமிழ் ஈழத்தில் தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வெள்ளம் வருமுன் அணை கட்டியாகவேண்டும், ஆனால் தமிழனோ 4ம் திகதியை எதிர்பார்த்து மயங்கிக்கிடக்கிறான்.

### மயக்கம் தீருமா?

"1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம்திகதியை எதோ ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று அன்று தமிழன் மயங்கியபடியால் தான் இன்று தமிழினம் இந்த இழிநிலைக்கு தள்ளப்பட்டது. சரியாக 30 ஆண்டுகள் கழித்தும் விழிப்புறுது தமிழன், 1978ம்ஆண்டும் பெப்ரவரி 4ம் திகதியை எதிர்பார்த்து மயங்கிக்கிடக்கிறான். இந்த 4ம் திகதி மயக்கம் என்றுதான் தமிழனை விட்டு நீங்குமோ? யானறியேன்." என்றார்.

இக்கட்டத்தில் திரு. ஈழவேந்தன் அவர்கள் அண்மையில் காலமான கல்விமான் திரு. ஹண்டிபேரின்பநாயகம் அவர்களது அஞ்சலி மலரிலிருந்து போதனமொழி தொடர்பாக அப்பெரியார் சுட்டிக்காட்டிய சில விடயங்களை சபையில் வாசித்துக் காட்டினார். அதன் விபரம் பின்வருமாறு.

### அறிஞர் ஹண்டி அறிவுரை

"1961ம் ஆண்டு 20 பேரை உள்ளடக்கி அமைக்கப்பட்ட தேசிய கல்விக் குழு அரசகரும மொழியை சகல கனிஷ்ட பாடசாலைகளிலும் சிரேஷ்ட பாடசாலைகளிலும் பயிலும் சகல மாணவர்களுக்கும் கட்டாயமாக போதிக்கப்படவேண்டும் என்றும் அதற்கேற்ப பொருத்தமான போதனாசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் விதந்துரைத்தது. ஆனால் திரு. ஹண்டி பேரின்பநாயகம் அவர்களோ இக் குழுவில் அங்கத்துவம் வகித்த மற்றைய தமிழ் உறுப்பினரான திரு. எஸ். நடேசன் அவர்களுடன் இணைந்து இதை எதிர்த்தார். இது பற்றி இவர்கள் இருவரும் எடுத்துரைக்கையில் தமிழர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை கடைசிவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நாம் இருசாராரும் நம்புவதற்கு போதியளவு காரணிகள் இருக்கின்றன. அவர்கள் இன்னும் தமக்கு பயன்தரக்கூடிய வகையிலான மாற்றுவழிகளை ஏற்றுக்கொள்வதிலேயே பூரண நம்பிக்கையுடையவர்களாக உள்ளார்கள்: அவர்களது இந்த எதிர்பார்ப்பு உறுதியானதாகவே யுள்ளது. சிங்களம் மட்டும் சட்டமானது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட இந்த நாட்டின் சகல அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைக் கொள்கையினின்றும் எதிர்பாராதவகையில் ஏற்பட்ட ஒரு விலக்கு மட்டுமேயாகும். இச்சட்டத்தைநிறைவேற்றிய பின்னர் கூட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இச்சட்டமூலம் தொடர்பாக இது நீதியான அறிவு பூர்வமான செயலா? என்பதில் அக்கட்சிக்கே சந்தேகம் ஏற்படலாயிற்று. ஆகவே சிங்களம் மட்டும் சட்டம்தான் இறுதியான தொன்றாகக் கருதி கல்விக் கொள்கையில் அதைப் புகுத்த வேண்டிய அவசியமே தோன்றவில்லை!"

திரு. ஈழவேந்தன் அவர்கள் சபையில் பிரசன்னமாயிருந்தோரிடம், சேர். பொன்னம்பலம் இராமநாதனின் வாழ்க்கை வரலாற்றில் முதல் தொகுதியை வெளியிட்ட திரு. வைத்திலிங்கம் அவர்கள் இப்போது இரண்டாவது தொகுதியை வெளியிடுவதில் ஈடுபட்டிருப்பதாகவும், இந்த இரண்டாவது தொகுதியில் திரு.பொன்னம்பலம்இராமநாதன் அவர்கள், தமிழ் இனத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கேடுகளை தீர்க்கதரிசனத்தோடு சுட்டிக்காட்டிய பகுதிகள் பல இடம்பெற்று இருப்பதால் இந்நூலை வெளிக்கொணர்வதில் இதன் நூலாசிரியர் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளை களைந்தெறியக்கூடிய வகையில் தமிழ் அபிமானிகள் பொருளுதவி புரிய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

### இராஜ மனோகரன்

இளங்கோ அவர்களைத் தொடர்ந்து திரு. க. இராஜமனோகரன் அவர்கள் உரையாற்றுகையில்:—

"உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டில் நாம் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இங்கு நடத்தப்படும் இனப்படுகொலையைப் பற்றி எடுத்துக்கூறிய பின்னர்தான் பல எழுத்தாளர்கள் உட்பட தமிழக மக்கள் இவ்வளவு கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு எப்படிவாழ்கிறீர்கள்?இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றனவா? என மூக்கின் மேல் கைவைத்துவிசாரித்தார்கள் படித்தவர்கள் கூட எமது பிரச்சினைகளை முற்று முழுதாக அறிந்து கொண்டவர்களாகத் தெரியவில்லை. ஆனால் அறிந்து கொள்வதிலே சாதாரண பொது மக்கள் மத்தியில் கூட ஆர்வம் கரைபுரண்டோடுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தை எம் தமிழ்த்தலைவர்கள் எமக்குச் சாதகமாகப் பயன் படுத்த வேண்டும். இந்தியாவுக்கு செல்லும்தலைவர்கள் தமிழகத்தின் தலைவர்கள் மத்தியிலே மட்டும் சென்று உரையாடி விட்டு வந்தால் போதாது. சாதாரண மக்கள் மத்தியில் சென்று நிலைமையை எடுத்து விளக்க வேண்டும்: இத்தகைய செயல்தான் இன்று தேவைப்படுகிறது. மாமல்லபுரத்தில் நாம் கவிதைகள் பாடியபோது சபையிலிருந்தோர் எமது இழிநிலை கேட்டு கதறி அழுதார்கள். கவியரங்கிற்கு தலைமை வகித்த பெருங்கவிக்கோ சேதுராமன் துக்கம்தளாமல் கண்ணீர்விட்டு அழுதார். இதன் பின்னர் எத்தனையோ வீர இளைஞர்கள் இவ்வளவு தொல்லைகளை அனுபவிக்கிறீர்களா? இப்படி இனி நடந்தால் இரவோடு இரவாக வள்ளத்தில் ஈழம் வருவோம் என்று வாய்விட்டுக்கூறினர். ஆகவே தமிழ் நாட்டில் நடைபெறும் மகாநாடுகளுக்குச் செல்லும் தலைவர்கள் திட்டமிட்டு பெருந்தொகையானோரை அழைத்துச் சென்று ஆங்காங்கே பல கருத்தரங்குகளை நடத்த வேண்டும்.

"இங்குள்ள சில கலாநிதிகள் அங்கு சென்று சில வட்டல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவர்கள் இங்கு எந்தக்கட்சி ஆளும் கட்சியாக விருக்கிறதோ அதற்கு ஏற்ப தாளம் போட்டு உண்மையை மூடி மறைத்து விட்டு வருகிறார்கள். இந்த மயக்கநிலையை தமிழ்த்தலைவர்கள் தகர்த்து ஏறிய வேண்டும் உண்மை நிலையை உரைத்திட வேண்டும்." என்றார்.

### இளங்கோ

இதன் பின்னர் திரு. வே. இளங்கோ உரையாற்றுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.—

"தமிழகத்தில்வாழும் தமிழர்கள் எம்மை இன்னும் தமிழ் தெரிந்த சிங்கவவர்கள் என்று தான் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தமிழர் பிரச்சினைபற்றிஒருபொது மேடையில். கூறியிருக்கிறீர்கள் இதுவரை நாம் இது பற்றி அறியவில்லையே என்று கூறினார்கள். ஏன் தமிழகம் செல்லும் நம் தலைவர்கள் பொதுமக்களைச் சந்திப்பதில்லை. தலைவர்களை மட்டும் சந்தித்தால் போதுமா? தலைவர்கள் இல்லாவிட்டாலும் எதையும் முன்னின்று எமக்காக சாதாரண பொதுமக்களே நடத்தக் கூடியவகையில் தமிழ்த்தலைவர்கள் அங்குள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

தமிழ்நாட்டில் எந்தவொரு திராவிட இயக்கமும் அடிப்படையான கோரிக்கையை கைவிடவில்லை. ஆனல் அது இப்போது தேவையில்லை என்பதால் அக்கோரிக்கையை சற்று ஒத்திப்போட்டு இருக்கிறார்கள். ஆனல் இலங்கையில் அப்படியான நிலையில்லை' தமிழ்நாட்டுக்கு அடுத்தபடியாக தமிழ் நாடு உருவாகக்கூடிய இடம் இலங்கை ஒன்றுதான். மலேசியாவில் வாழும்தமிழர்களுக்கு பாரம்பரிய நிலமில்லை. மலேசிய அரசு அங்குள்ள தமிழர்களை அழிக்காது."தமிழர்கள் தன்னைத்தானே அழித்தாலன்றி வேறுவகையில் மலேசிய தமிழர்களுக்கு அழிவில்லை" என முரசுமாறன் குறிப்பிட்டார். ஆனல் இலங்கையிலோ நாம் அழிவுப்பாதைக்கே தள்ளப்படுகிறோம். இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் அடைந்தாலும் அவர்களை தனிநாடுகோராத நிலைக்கு தள்ள வேண்டும் என்பதே ஜே. ஆரின் எண்ணமாகவுள்ளது. சிங்களவர்களைத் தமிழ்ப்பகுதிகளில் குடியேற்றுவதன் மூலம் இதைச் செயற்படுத்தி வருகிறார்.

"மலேசிய இளைஞர்கள் தமிழீழ விடுதலைக்கு நிதியுதவிகூட செய்யத்தயாராக விருப்பதாகக் கூறினார்கள். மொழியாலும் மதத்தாலும் ஒன்றுபட்ட எம்மை மாகடலால் தானும் பிரிக்கமுடியாது என்றனர். உலக மக்கள் விழிப்படைந்துவிட்டார்கள். அவர்களது அனுதாபம் எம்பால் திரும்பிவிட்டது. அந்த அனுதாபத்தை நாம் ஆதரவாக மாற்றவேண்டும், ஆகவே எமது தலைவர்கள் தமிழ்நாட்டுக்குச் சென்று சாதாரண பொதுமக்களை சந்திப்பதன் மூலம்தான் இது சாத்தியமாகும். அப்போதுதான் சாதாரண மக்கள் தி.மு.க., அ.தி.மு.க. முதலான இயக்கங்களை தூண்டி தமது ஆதரவுக்கு செயலுருவம் கொடுக்கமுடியும். சலுகைகளும் வசதிகளும்பெற்ற தலைவர்கள் இதை நடைமுறைப்படுத்தல் இலகுவாகும். இதுவே விடுதலைக்குஒரு வழியாகும்" என்றார்.

—(தொகுப்பு பொன் பூலோகசிங்கம், கொழும்பு வளாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வெள்ளையனே வெளியேறு’ என்று காந்தியார் கூறியதுபோல், நாமும் உரிய தருணம்வரும்போது போர்க்குரல் எழுப்புவோம்!’

## தியாகிகள் நினைவுதினக் கூட்டத்தில் தலைவர் நாவலர் எழுச்சியுரை!

:“இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது சரியான தருணத்தில் காந்தியடிகள் “வெள்ளையனே வெளியேறு” என்று குரலெழுப்பியது போலவே, நாமும் சரியான தருணத்தில் “சிங்கள ஏகாதிபத்தியமே வெளியேறு” என்று போர்க்குரல் எழுப்புவோம்! நீதி நேர்மை, சத்தியம் இவற்றின் வழியே சென்றால் இறுதி வெற்றி எமக்கேயுரியது!

இவ்வாறு தமிழ் மாநாட்டு தமிழ்த் தியாகிகள் நினைவாக 10-1-78ல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

“கடந்த ஆகஸ்டில் தமிழ் மக்களின் கற்பு, உயிர், சொத்து என்பன திட்டமிட்டுச் சூறையாடப்பட்டன. இது கடைசிச் சம்பவமாக இருக்காது என்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். அடிமைப்பட்டஇனம் நாடு முழுவதும் பரவிவாழ்வதால் இந்த நிலை ஏற்பட்டு வருகிறது.

### பின் வாங்கமாட்டோம்

“1974ம் ஆண்டு எந்தப் பாதையில் செல்வதென முடிவு செய்தோமோ, அதைவிட எமக்கு வேறு பாதையில்லை. அந்தத் திருப்பு முனையிலிருந்து மீண்டும் வந்த பாதைக்குத் திரும்பிச் செல்லமாட்டோம். இனியும் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழமுடியாது என எடுத்த முடிவு இறுதி முடிவாகும். எனவே தமிழ்ஈழ சுதந்திரத்தை நோக்கி தொடர்ந்தும் முன்னேறிச் செல்வோமே தவிர பின்வாங்க மாட்டோம்.

இந்த உறுதியை பாராளுமன்றத்திலும் அடிக்கடி கூறி வருகிறோம். தமிழ்ஈழம்என்ற சொல் சிங்கள எம். பி.க்கள் வாயிலும் அடிக்கடி இப்போது இடம் பெறுகிறது.”

கடந்த காலத்தில் எமது பிரச்சினைகளை வெளிநாட்டினர் அறியாவண்ணம் ஆட்சியாளர் மறைத்துவைத்திருந்தனர். எதிர்க்கட்சித்தலைவர்பதவி எனக்குக் கிடைத்த வாய்ப்பை வைத்துக்கொண்டு நமது இலட்சியத்தை இப்போது நன்கு பிரசாரம் செய்துவருகிறோம். வெளிநாட்டிலிருந்து அரசாங்கப் பிரதிநிதியோ, பத்திரிகையாளர்களோ யார் வந்தாலும் என்னைச் சந்திக்காமல் போக முடியாதநிலை இன்று ஏற்பட்டுள்ளது. இந் சந்திப்புக்களை நன்கு பயன் படுத்துகிறோம்.

“எமது இலட்சியத்தின் முக்கிய அங்கம் வெளிநாடுகளின் ஆதரவைத் தேடுவதாகும். உலகின் அபிப்பிராயத்தை நமது பக்கம் திருப்பும் வேலை இப்போது நடந்து கொண்டிருக்கிறது.”

### ஜே. ஆரின் தந்திரம்

அரசியல்சாசனத்திருத்தத்தின் மூலம் யூ.என்.பி. ஆட்சி தமிழனுக்கு உரிமைவழங்க விருந்த சமயம் அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துவிட்டோம் எனவும்,சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுள்ளோம் என்றும் கூட்டணி மீது பழிபோட்டு பிரதமர் உலக அரங்கில் ஒரு அபிப்பிராயத்தைஏற்படுத்தமுயல்கிறார். இதற்குப் பொறுப்பாளிகள் நாமே என்று பாரத்தைத் தந்திரமாக எங்கள் தலையில் போட்டுவிடமுயற்சி செய்கிறார். இந்தத் தந்திரத்தில் சிக்காமலிருப்பதற்கே இப்போது நாம்சிறிது அமைதியை கடைப்பிடித்து வருகிறோம்.

### கடமையில் தவறிய பிரதமர்

கடந்தகலவரத்தின்போது தமிழ்மக்களைபாதுகாக்க ஜே. ஆர். தவறிவிட்டார். ஆனால் அதற்கான பழியை எம் தலையில் போடப்பார்த்தார். ஒரு வாரத்தின் பின்தான் இது அரசாங்கத்துக்கு விரோதமான சக்திகளின்சூழ்ச்சிஎன அமைச்சரவை அறிக்கை வெளியிட்டது. அரசுக்கு விரோதமான சக்தியா? சார்பான சக்தியா? இப்படிச் செய்தது என்பது எமக்குத் தெரியாது, ஆனால் கைதானவர்களைப் பிணை எடுத்தவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும்.

“தனக்கும் இனக்கலவரத்துக்கும் சம்பந்தமில்லைஎன்று முன்னைநாள் அமைச்சர் திரு. கே.பி. இரத்னயகாகண்ணீர் வடித்துக் கடிதம் ஒன்றை எனக்கு எழுதியிருந்தார். தான்செய்ததாகக் கருதினால் என் முன்னிலையில் விசாரணை நடத்துமாறும் நான் விதிக்கும் தண்டனையை ஏற்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

“எது எப்படியிருப்பினும் எதிர்வரும் பெப்ரவரிமாதம் 4ம் திகதிவரையுள்ளகாலகட்டம் இலங்கை அரசியலில் மிகமுக்கியமானகட்டம்.இன்றைய அரசு தனக்குள்ள பலத்தை வைத்துக்கொண்டு எமது விஷயத்தில் தப்புக் கணக்குப் போடுகிறது. 1972ல்தன்னை யாரும் அசைக்கமுடியாது என்று கருதிய ஸ்ரீமாவோ அரசின்இன்றைய நிலை யென்ன? அவர் 84நாடுகளைக்கூட்டி கூட்டுச்சேரா மகாநாடு நடத்தினர்.இன்று 8பேர்தான் பாராளுமன்றத்தின் ஒருமூலையில்இடம்பெற முடிந்தது.

வரவுசெலவுத்திட்டத்தின் தாக்கம்இன்றையஅரசுக்குள் ஏற்படத்தான் போகிறது. எம்.பி. க்கள் தம் தொகுதிக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலை ஏற்படும். தேர்தலில் அமோக ஆதரவுபெற்று வந்துள்ள நிலையில் ஜே. ஆருடன் மோதுவது புத்திசாலித்தனமல்ல. இப்போது தேர்தல் நடந்தால் எட்டுப் பேர் தானும் வர முடியாது என அரசாங்கக் கட்சி எம்.பி. ஒருவர் சொன்னார். அவர்களுக்கு விரோதமான சக்தி அங்கு உருவாகி வருகிறது.

### காலமறிந்து பொருதுவோம்

பகைமையை வெல்ல சரியான நேரத்தில் தான் பொருத வேண்டும். மாற்றான் பலத்துடன் இருக்கும்போது மோத விரும்புபவன் திருக்குறள் படித்த தமிழனாக இருக்க முடியாது.

“பல்வேறு [illegible] காகவே இப்போது அமைதியாக இருக்கிறோம் என தம்பிமாருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதுவெளிநாட்டுப் பிரசாரப் போர் நடந்து கொண்டிருக்கிறது; சில சமயம் நேரடிமோதல், மற்றும் சில சமயங்களில் நிர்மாணத்திட்டம், இப்படித்தான் காந்தியடிகள் இந்திய சுதந்திரப்போரை வழிநடத்தினர். இரண்டாவது உலக மகாயுத்தத்தில்இங்கிலாந்து முழுவதும் தரை மட்டமாக்கப்பட்டிருந்த சமயத்தில் அவர் வெள்ளையனே வெளியேறு என்றார். எனவே உரிய நேரத்தை நாம்புரிந்துதான் போர்க்குரல் எழுப்புவோம். அதற்கிடையில் இளைஞர்கள் தம் சக்தியை காட்டாறு வெள்ளம் போல் வீணாக விரயமாக்கக்கூடாது; நீதி, நேர்மை, சத்தியம் ஆகியவற்றின் வழியில் சென்றால் இறுதியில் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

இக்கூட்டத்தில் வண,பிதா சர்வானந்தன் அடிகளார் பேசுகையில் கூறியதாவது:-

,ஈழத்துத் தமிழ் மக்கள் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் மனிதன் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிக் காவியம் படைத்து வருகிறான். இது அவனது இயல்பான உணர்ச்சியேயாகும். இக்காவியங்கள் மையாலும் அச்சு வாகனத்தாலும் மட்டுமல்ல, கண்ணீராலும் செந் நீராலும் படைக்கப்பட்டு வருகின்றன. ,வெறியாட்டங்களின் விளைவாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சியின் வேகம் இப்போது கூடியிருக்கிறது; போராடாமல் விடுதலை பெற முடியாது. வாலிபர்கள் கட்டுப்பாடாக இருந்து போராட்டங்களில் ஈடுபடுவதுடன் நாம்தேர்ந்தெடுக்கும் தலைவர்களிடம் நம்பிக்கை வைக்கவும் வேண்டும். அவசரமும் அந்தரமும்வேண்டாம். தலைவர்களுக்குக் கீழ்ப் படிந்து அவர்களின் பின்னால் செல்ல வேண்டும். எல்லாவற்றையும் எல்லோருடனும் கலந்து பேசுபவர் தலைவராக



இருக்க முடியாது. இக் கட்டுப்பாடுகளுடன் நடந்து கொண்டால் விரைவில்தமிழ் ஈழம் காண்போம்.’

சிவஸ்ரீ நா. க. குகநாதக் குருக்கள் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்.

‘இம் மாதிரியான ஆத்ம சாந்தி நிகழ்ச்சிகளில் நாம் பங்கு பற்றுவதை சில குருக்கள் மார் கேலி செய்கிறார்கள் ஆனால் அவர்களோ பிறமதத்தவரான சிங்கள ஏகாதிபத்தியத்தின் அமைச்சர்களின் வரவேற்புகளில் கலந்து கொள்கிறார்கள். நாம் செய்வது தவறு என்று சொல்பவர்கள் கீரிமலையில் அந்தியேட்டி செய்யலாமா?

மாவட்ட மந்திரி பதவி பற்றி மரத்தின் கீழ் நின்று இப்போது ஒருவர் பேசி வருகிறார், தனக்கு அது கிடைக்காதா என நப்பாசை கொள்கிறார். இத்தகைய பதவிவகித்தவர்களால் கடந்த காலத்தில் நாம் பட்ட அவதி போதும்.’

மௌலவி பாஷா முகிதீன் பிச்சை பேசும் போது, தலைவர்கள் காட்டிய வழியில் தான் நாம் போராட்டம் நடத்த வேண்டுமென்று வலியுறுத்தினர்.

## தமிழ்ப் பண்பாட்டியக்க பிரதிநிதிகள் சந்திப்பு

உலகத் தமிழ்ப்பண்பாட்டியக்கத்தின் இலங்கைக் கிளையின் சந்திப்பு ஒன்று 5.2.78ல் அன்று மாலை 3.00 மணிக்கு குரும்பசிட்டியில் ‘தமிழகம்’ இல்லத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்த இயக்கத்தில் உறுப்பினராகச் சேரவிரும்புவோர் 31-1-78க்கு முன் இயக்க இலங்கைக்கிளைத் தலைவர் திரு. ச. ஜெயசேகரன், வேலணை கிழக்கு. வேலணை-3 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கும்படியும், மேற்படி சந்திப்பின்போது நேரடியாக வந்து கலந்து கொள்ளும் படியும் கேட்கப்பட்டுள்ளனர். மொறிசியசு இறியூனியன் தீவுகளில் நடைபெறஏற்பாடாகியுள்ள அடுத்த மாநாடு பற்றிய பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனித்தல், இயக்க ஏடான ‘உலகத் தமிழர் குரலை’ நிர்வகிக்க ஒரு குழு அமைத்தல் மாவட்ட ரீதியில் இயக்கப் பொறுப்பாளர்களை நியமித்தல் முதலியன இச்சந்திப்பின் போது முக்கிய கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





பாவியுங்கள்

ரோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்று ஜோர் தயாரிப்பு

ரோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

ரோயல் பேக்கிங்பவுடர்
ரோயல் கஸ்டட் பவுடர்
ரோயல் கோண் பிளவர்
ரோயல் பிஸ் மக்ஸ்
ரோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இண்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தார்மீக ஆட்சியில் எங்கும் எதிலும் தனிச் சிங்களம்!

சிங்களம் தெரியாத காரணத்தினால் யாரும் இரண்டாந்தர பிரஜையாக கணிக்கப்படக்கூடாது; பாதிக்கப்படக்கூடாது; இதுவே தமது தார்மீக அரசின் இலட்சியம் என்று பிரதமர் ஜே. ஆர். அடிக்கடி வாய்ப்பறை அறைந்து வருகிறார். ஆனால் நடைமுறையில், அவரது அரசிலிருந்து நாள்தோறும் சிங்களம் தெரியாத தமிழ் மக்களுக்கு தனிச்சிங்களக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதோ ஒரு பானைக்கு ஒரு அவிழ்பதம் பார்ப்பதுபோல சில உதாரணங்கள்;

● தேசிய பயிற்சியாளர் சபை (National Apprenticeship Board) ஒருநேர்முகப் பரீட்சையை 11-12-77ல் கொழும்பில் நடத்தியது. இந்நேர்முகப்பரீட்சைக்கு வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து சிங்களம் ஒரு சொல்லும் தெரியாத தமிழ் இளைஞர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் இந்த நேர்முகப் பரீட்சையின் போது. சபை அதிகாரி சேவை நிபந்தனைகள், மற்றும் சம்பந்தப்பட்ட விஷயங்களையிட்டு தனிச்சிங்களத்திலேயே உரையாற்றினார். சிங்களம் தெரியாத தமிழ் இளைஞர்கள் பேந்தப் பேந்த விழித்தனர்.

● இ. போ. ச.விலிருந்து சாரதிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அண்மையில் தமிழர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் தனிச் சிங்களத்திலேயே இடம் பெற்றுள்ளது.

● விமானப்படை (AIR FORCE)யில் ஆட்களை எடுப்பதற்கான நேர் முகப் பரீட்சை அழைப்புக் கடிதம் தனிச்சிங்களத்திலேயே அனுப்பப்பட்டுள்ளது.

● யாழ்ப்பாணத்தில் கூட, யாழ்ப்பாணத் தபால் நிலையம் வழங்கும் தொலைபேசிக் கட்டணபற்றுச்சீட்டு (Bill) சிங்களமும், ஆங்கிலமும் கொண்டதாக மட்டுமேயிருக்கிறது—தமிழில் இல்லை! இவை மிகச்சில—இன்னும் எத்தனையோ? தனிச்சிங்கள திணிப்புக்குப் பெயர்தான் தார்மீகமா என்று தமிழ் மக்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப்பார்த்து வேதனையுடன் கேட்கிறார்கள்;

## பெப்ரவரி 8-ல் விசாரணை ஆரம்பம்

1977 ஆவணியில் நடைபெற்ற இனக்கலவரம் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கென அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் சன்சோனி ஆணைக்குழு, பெப்ரவரி 8ம் நாள் தனது விசாரணையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கிறது. யாழ்மாநகர மண்டபத்தில் நடைபெறும் இந்த விசாரணையின்போது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ் பா. உ. திரு; வெ. யோகேஸ்வரன், கோப்பாய் பா. உ. கதிரவேற்பிள்ளை உட்படபலர் சாட்சியமளிக்கவுள்ளனர்;

இது இப்படியிருக்க, தமிழர் மறுவாழ்வுக்கழகத் தலைவர் திரு. கே, ஸி. நித்தியானந்தா வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, ஆவணி இனக்கலவரத்தின் போது350தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்; 150 தமிழர்கள் எங்கேயென்று இன்னமும் தெரியாத நிலையிலுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்


செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

4-ம் வாரம்

றீகல் (மட்டுநகர்)

கணேஸ் பிலிம்ஸ்சார் அளிக்கும்



நான் உங்கள் தோழன்

கெயிட்டி [கொட்டாஞ்சேனை] 6-வது வாரம்

முத்துராமன், ஸ்ரீகாந்த், வி. கே. ராமசாமி தேங்காய் சீனிவாசன், ஜெயசித்ரா எஸ். வி. ராமதாஸ், குமாரி பத்மினி சுருளிராஜன், எம் பானுமதி மாஸ்டர் குமார், ஜெயவாணி ஐ. எஸ். ஆர். கண்ணையா, ஹலம்

— நடித்த —

இன்ஸ்பெக்டர் மனைவி

கெப்பிட்டல் (கொழும்பு) 4-வது வாரம்

சிவாஜி-ஜெமினி —நடித்த—

உனக்காக நான்

(கலர்)

லிடோ (யாழ்ப்பாணம்) 16-வது வாரம்

எம். ஜி. ஆர்., லதா — நடித்த —

நீதிக்கு தலை வணங்கு

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்) 6-வது வாரம்

முத்துராமன், சுஜாதா — நடித்த —

முத்தான முத்தல்லவோ

கிங்ஸ்லி (கொழும்பு) 11-வது வாரம்

கமலஹாசன், ரஜனிகாந்த், ஸ்ரீதேவி, விஜயா நடித்த-

கே. பாலச்சந்தரின்

மூன்று முடிச்சு

பிளாசா 4-வது வாரம்

கணேஷ் பிலிம்ஸ்சார் அளிக்கும்

நான் உங்கள் தோழன்


இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் [illegible] பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி; யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org